# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 14, 2019 Weekly E-paper • December 14, 2019





# குடியுரிமை மக்களுக்கா? மதத்திற்கா?

எழில்.இளங்கோவன்

**உள்ளாட்சித் தேர்தல் ஜனநாயக வன்முறை**

தம்பி பிரபு

**விவாத (அ)நாகரிகம்!**

தலையங்கம்

**முதல் அமைச்சரவை**

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 14, 2019 Weekly E-paper • December 14, 2019


# குடியுரிமை மக்களுக்கா? மதத்திற்கா?

• எழில்.இளங்கோவன்

பவுத்த மதவாதம் இலங்கை அரசுக்குச் சொந்தம். இந்து மதவாதம் மோடி அரசுக்குச் சொந்தம். இதை உறுதி செய்வது போல அமைந்திருக்கிறது 'இந்தியக் குடியுரிமைச் (திருத்த) சட்டம் 2019'.



குஜராத் கலவரம், கோத்ரா இரயில் எரிப்பு இவைகளால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் முஸ்லிம்கள். அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதிலும், அது இராமன் பிறந்த இடம் என்று சொல்வதிலும் இஸ்லாமிய எதிர்ப்பு இருக்கிறது.

இந்தியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிரான கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் அமைப்பு ஆர்.எஸ்.எஸ். 1915 ஆம் ஆண்டு அமிர்தசரசில் மதன்மோகன் மாளவியா, லாலா லஜபதிராய் ஆகியோர் தலைமையில் உருவான அமைப்பு 'அகில பாரதிய இந்து மகா சபா'. 1920 ஆம் ஆண்டு இதன் தலைவராக வந்த வினாயக் தாமோதர் சாவர்க்கார் என்பவரால் கொள்கையாக வடிவமைக்கப்பட்டதுதான் 'இந்து தேசியம்'. இதற்குள் இருப்பது இந்துராஷ்டிரம், பார்ப்பனியம். இந்த சபாவில் இருந்து உருவானது ஆர்.எஸ்.எஸ் என்ற 'ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்க்' . 1925 செப்டம்பர் 27 ஆம் நாள் இவ்வமைப்பை உருவாக்கியவர் கேசவ் பாலிராம் ஹெட்கேவர்.

1940 முதல் 1973 வரை இதற்குத் தலைவராக இருந்த மகாதேவ் சதாசிவ கோல்வால்கர், இந்து மகாசபாவின் அதே இந்து தேசியத்தை ஆர்.எஸ்.எஸ்-இன் அடிப்படைக் கொள்கையாக்கினார். ஆர்.எஸ்.எஸ்-இன் இன்றைய அரசியல் பிரிவான பாரதிய ஜனதா கட்சியை முன்னிறுத்தி, மோடி என்ற நிழல் பிரதமரை வைத்து இன்று இந்தியாவை ஆட்சி செய்கிறது ஆர்.எஸ்.எஸ்.

இந்நிலையில் ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே நாடு, அது இந்து ராஜ்யம், இந்து தேசியம் என்ற கோட்பாட்டைத் தோலுரித்துக் காட்டுவதாக அமித் ஷா மூலம் வந்திருக்கிறது 'இந்தியக் குடியுரிமைச் (திருத்த) சட்டம் 2019. இச்சட்டத்தின்படி பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய முஸ்லிம் நாடுகளில் இருந்து அகதிகளாக வரும் இந்துக்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள், பவுத்தர்கள், சமணர்கள் உள்ளிட்டோர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும். ஆனால் முஸ்லிம்களுக்குக் குடியுரிமை மறுக்கப்படுகிறது, வழங்கப்பட மாட்டாது.

மதச்சார்பற்ற சமத்துவம் இப்படித் தகர்க்கப்படுவதால், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இச்சட்ட முன்வடிவை எதிர்த்தன. 1955 ஜூலை 19ஆம் நாள் இயற்றப்பட்ட இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின்படி, இந்தியாவில் 11 ஆண்டுகள் தங்கி இருந்தால் அவர்களுக்குக் குடியுரிமை கிடைக்கும். இந்தச் சட்டம் திருத்தப்பட்ட போது 11 ஆண்டுகள் 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டன. கவனிக்க வேண்டிய செய்தி, இங்கே மதம் நுழைக்கப்படவில்லை.

1971 இல் நடைபெற்ற இந்தியா - பாகிஸ்தான் போர், பங்களாதேஷ் விடுதலைப் போராட்டங்களினால், அந்த நாடுகளில் இருந்து பல இலட்சம் பேர்கள் அகதிகளாக இந்திய வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், திரிபுரா, மேகாலயா, மேற்கு வங்கத்தில் குடியேறினார்கள்.

1971 மார்ச் 24ஆம் தேதி நள்ளிரவுக்கு முன்னால் இந்தியாவில் வசித்து வந்த அகதிகள் 'தேசியக் குடிமக்கள் பதிவேட்டில்' சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட பிற உரிமைகளும் கொடுக்கப்பட்டன. இங்கும் மதம் நுழைக்கப்படவில்லை. ஆனால், நாடாளுமன்ற இரு அவைகளிலும் வைக்கப்பட்ட, 2019 குடியுரிமைச் சட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக, நேரடியாக மதம் பாய்ச்சப்பட்டு விட்டது. இந்தியாவின் மதச்சார்பற்ற, சமத்துவம், பன்முகத் தன்மை ஆகிய கோட்பாடுகளுக்கு எதிராக இந்தக் குடியுரிமைச் சட்டம் இடியாக இறங்கி விட்டது.

இது ஒருபுறம் இருக்க, பவுத்த சிங்களப் பேரினவாதத்தால் அகதிகள் ஆக்கப்பட்டு தமிழகம் (இந்தியா) வந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள் குறித்து இந்தக் குடியுரிமைச் சட்ட முன்வடிவு எதுவும் சொல்லவில்லை.

தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களில், 107 அகதி முகாம்களில் 30 ஆண்டுகளாக வைக்கப்பட்டுள்ள 59,714 ஈழத் தமிழர்களில் 98 விழுக்காடு இந்துக்கள். இவர்களின் நிலை என்ன? இவர்களுக்குக் குடியுரிமை உண்டா? இல்லையா?

அஸ்ஸாம், திரிபுரா, மேகாலயா, மேற்கு வங்கம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் இச்சட்டத்திற்கு எதிராக மக்கள் போராடுகிறார்கள். அங்கே சமூக ஊடகங்கள் துண்டிக்கப்பட்டதாகச் செய்திகள் சொல்கின்றன. பல்வேறு மாநிலங்களில் எதிர்ப்புதோன்றத் தொடங்கி விட்டது என்றும் செய்திகள் வருகின்றன.

இந்தக் குடியுரிமைச் சட்டம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறி விட்டது.

இத்திருத்தச் சட்டம் இன்று முஸ்லிம்களுக்கு எதிராக இருக்கிறது. நாளை தலித்துகள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் நிலையும் இப்படித்தான் ஆகும்.

●

# உள்ளாட்சித் தேர்தல் போர்வையில் ஜனநாயக வன்முறை

● தம்பி பிரபு

தமிழக அரசியல் வரலாற்றிலேயே உள்ளாட்சித் தேர்தலில் இத்தனை குழப்பங்கள், தவறுகள், முன்னெப்போதும் நடந்ததில்லை. இதற்கெல்லாம் தகுதியற்றுத்தான் 1996க்கு முன்பு உள்ளாட்சித் தேர்தலே நடைபெறவில்லை போலும்!

சற்றுப் பின்னோக்கிப் பார்ப்போம்.

ஊராட்சி மன்ற அலுவலகம் அது. நாற்காலியின் நுனியில் அமர்ந்திருந்தார் அவர். யாராவது வந்து எழச் சொல்லலாம், ”வெளியே போ” என்று அதட்டலாம் என்ற பயத்தில் அமர்ந்திருந்தார் போலும். அப்படித்தான் அவர் உடல்மொழி இருந்தது. இத்தனைக்கும் அவர்தான் ஊராட்சித் தலைவர். அங்குள்ளவர்களுக்குச் சரிசமமாக இவரைப் போன்றவர்கள் அமர்வார்கள் என்ற ஒரே காரணத்திற்காக நெடுங்காலமாகத் தேர்தல் நடக்க விடாமல், நடந்தால் தங்களுக்குள் வேண்டப்பட்ட ஒருவரை நிறுத்தி, பின்னர் பதவி விலகச் செய்ய வைக்கும் சாதிய வாதிகள் பெரும்பான்மையாக உள்ள ஊர் அது.



அந்த ஊர் மதுரை மாவட்டத்தில் உள்ள பாப்பாபட்டி. இதே போல் சாதிக் கட்டுமானம் உள்ள கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டாங்கச்சியேந்தல் போன்ற ஊர்ப் பெயர்களும் அவ்வப்போது செய்தித்தாள்களில் வரும், அப்பொதெல்லாம்.

பின்னர் தேர்தல் நடைபெற்று ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்தந்த ஊர்களுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டனர். அதில் ஒருவர்தான் நான் மேலே குறிப் பிட்டுள்ளவரும், தனது பதவியேற்பின்போது நாற்காலியின் ஓரத்தில் அமர்ந்திருந்தவருமான பெரிய கருப்பன்.

பின்னர் நிகழ்ந்த கதைகள் நிறைய உண்டெனினும் 2006-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கலைஞர் தலைமையிலான திமுக அரசுதான் அங்கு தேர்தல் நடந்தே ஆக வேண்டும், ஜனநாயகம் எனும் மாளிகையின் வாசலுக்காவது தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களும் வரவேண்டும் என ஒற்றைக்காலில் நின்று அதை நடத்தி முடித்தது. மதுரை மாவட்ட ஆட்சியர் த.உதயச்சந்திரன் அவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, சாதுர்யமாகவும், விரைவாகவும் செயல்பட்டு அப்போது தேர்தல் நடைபெற்றது. அதன்விளைவாக, தனி ஊராட்சிகளான பாப்பாபட்டியில் பெரிய கருப்பன், கீரிப்பட்டியில் பாலுச்சாமி, நாட்டார்மங்கல்த்தில் கணேசன், கொட்டாங்கச்சியேந்தலில் கருப்பன் ஆகியோர் வெற்றிபெற்றுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதற்கெல்லாம் முன்முயற்சியாகக் கலைஞர் அரசு அங்கிருந்த மற்ற சமுதாய மக்களை அழைத்துப் பேசி, சமத்துவத்தை ஏற்படுத்தி, “சமத்துவப் பெருவிழா”வெல்லாம் நடத்தி, போட்டியிட்டவர்களுக்கு ஊக்கமளித்து, பாதுகாப்பளித்து, தேர்தல் சுமுகமாக நடந்தால் ஊர் மேம்பாட்டுக்காக அதிக நிதி ஒதுக்கப்படும் என்றெல்லாம் அறிவித்து, பின்னர் நடந்த தேர்தல் அது.

பெரியாரை வழிகாட்டியாகக் கொண்டு, சமூக நீதியைப் பேணிக் காக்கும் ஓர் அரசு எப்படி இயங்கவேண்டும் என்பதற்கான இலக்கணத்தை நிரூபித்த வரலாற்றுத் தருணம் அது.

ஒரு தனிநபரோ, அரசு இயந்திரத்துக்குச் சம்பந்தமில்லாத ஒரு கூட்டமோ, விழிப்புணர்வில்லாத ஒரு கும்பலோ, சாதிவெறி தலைக்கேறிய சமூகத்தின் ஒரு பகுதியோ மேற்சொன்ன மாதிரித் தவறிழைத்தால் அதைத் திருத்த வேண்டிய பொறுப்பு ஒரு அரசுக்கு இருக்கிறது. ஆனால் அரசே இந்த ஜனநாயக வன்முறையைப் பிரயோகித்தால்? தற்போது ஆட்சி பீடத்தில் மகுடம் சூடியிருக்கும் எடப்பாடி தலைமையிலான அரசு அதைத்தான் செய்துகொண்டிருக்கிறது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி உள்ளிட்ட உள்ளாட்சிப் பகுதிகளுக்குச் சரிவர வார்டு வரையறை செய்யப்படவில்லை என்பது அனைத்துக் கட்சியினரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. பிரதிநிதித்துவச் சட்டத்தின் படி சட்டமன்றத் தேர்தலில் ஒரு தொகுதிக்குள் வரும் வார்டு அமைப்பு, உள்ளாட்சித் தேர்தலின் போது வேறு ஒரு தொகுதிக்குள் செல்லக்கூடாது. இது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

நிறையக் குழப்பம் இருந்தாலும் கூட நாம் இதில் கவனிக்கவேண்டிய முக்கியச் செய்தி என்னவெனில் சமூக நீதி சரிவரப் பின்பற்றப்படுகிறதா என்பதுதான். திமுக தொடர்ந்த வழக்கும் இதன் அடிப்படையில்தான். இந்த வரையறைகளில் தாழ்த்தப்பட் டோர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சிமுறையைப் பின்பற்றாமலும், அவசர கதியில் தேர்தல் அறிவிப்பை வெளியிட்டுள்ளது, எடப்பாடி அரசின் கைப்பாவையாக விளங்கும் மாநிலத் தேர்தல் ஆணையம்.

பெண்களுக்கு 50 சதவிகிதம், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதம் என்பதைப் புதிய மாவட்டங்களுக்கு மட்டுமன்றி இன்னும் பழைய மாவட்டங்களுக்கும் கூட வரையறை செய்யாத நிலையில், அதற்கு முயற்சிக்காமல் “பேடி கை வாளாண்மை” போலச் செயல்படும் இந்த அரசு கடும் கண்டனத்தைப் பொது வெளியில் எதிர்கொள்கிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

நகர்ப்பகுதிகளுக்குத் தேர்தல் இல்லை என்றும், ஊரகப்பகுதிகளுக்கு மட்டும் என்றும் சொன்னவர்கள் இப்போது அதிலும் ஒரு வெட்டு வெட்டுகிறார்கள். 9 மாவட்டங்கள் தனித்து விடப்பட்டுள்ளதாம். இவர்கள் தேர்தல் நடத்துவது ஜனநாயகத்தைக் காக்க என்று யாரும் இன்னும் நம்பிக்கொண்டிருந்தால் அய்யோ பாவம், அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள்.

பின் ஏன் அவர்கள் மெனக்கெட வேண்டும்? அவர்களின் நோக்கம் நமக்குத் தெரியாமலில்லை. அவர்கள் கண்களுக்குத் தெரிவது நமக்கும் தெரிகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படும் நிதி, மத்திய அரசால் வழங்கப்படாமல் இருக்கும் அந்த நிதிதான் அவர்கள் கண்ணை உறுத்துகிறது. இருக்கிற அனைத்துத் துறைகள் மூலமும் நல்ல வரும்படி பார்த்த கை இந்தத் துறையை விட்டுவிடுமா?

கிணறு வெட்டாமலும், அதை மூடாமலும் அவர்கள் கடைசியாய் எழுதப்போகும் கணக்குதான் அவர்களின் இத்தனை நாடகங்களுக்கும் காரணம். ஆனால் அதுவே அவர்களின் கடைசிக் கணக்கென அவர்கள் அறிந்தே வைத்திருக்கிறார்கள். அதற்குத்தான் இத்தனை அக்கறையோடு எலி அரிசி மூட்டையை அவிழ்க்குமே அதுபோல வேகமாகச் செயல்படுகிறார்கள்.

ஆங்காங்கே பெரிய அளவில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுப்

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## 3-ஆம் பக்க தொடர்ச்சி

பதவிகள் ஏலம் எடுக்கப்படுகின்றன. கடந்த 7-ஆம் தேதி தேர்தல் அறிவிப்பு வெளிவந்து 9-ஆம் தேதி மனுத்தாக்கல் தொடங்கி, இன்னும் அதிமுக சார்பு வேட்பாளர்கள் அறிவிக்கப்படாத நிலையில் பல இடங்களில் வெளிப்படையாக ஏலம் நடைபெறுகிறது. பண்ருட்டி அருகே ஊராட்சித் தலைவர் பதவியை 50 லட்சத்திற்கு ஏலம் எடுத்துள்ளார் அப்பகுதி அதிமுக பிரமுகர். துணைத் தலைவர் பதவி ரூ.15 லட்சம் 'ஒரு தரம், இரண்டு தரம்' என்று கூப்பாடு போடும் காணொளி சமூக ஊடகங்களில் பரவிக் கிடக்கிறது.

2011 மக்கள்தொகை கணக்கீட்டின்படி வரும் 27, 30-ஆம் தேதிகளில் தேர்தல் நடத்த உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம். 2011ஆம் ஆண்டில் தமிழக மக்கள் தொகை 7.14 கோடியாகும். அதற்கு முன் 2001ஆம் ஆண்டில் தமிழக மக்கள் தொகையானது 6.21 கோடியாக இருந்தது. இந்த வளர்ச்சியின் அடிப்படையில் 2018-ஆம் ஆண்டு மக்கள் தொகை 8.12 கோடி எனப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன. 2018ல் 5.18 கோடி பேர் வாக்காளர்கள் இருக்கிறார்கள் எனவும் புள்ளிவிவரம் சொல்கிறது. ஆக, வாக்காளர்கள் எண்ணிக்கை உயரும்போது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் படி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்களா என்ற கேள்வி எழுகிறது.

ஆனால் 1991-ஆம் ஆண்டு வரையறையை மாற்றாமலே தேர்தலை நடத்த முற்படுகிறது அரசு. 1991 வரையறையின்படி நாம் மக்கள் தொகையைக் கணக்கிட்டுத் தேர்தல் நடத்த முற்படுகையில் தார்மீக ரீதியாக மட்டுமல்ல, தர்க்க ரீதியாகத் தவறாக அமையும். எனவே முறையாகவும், முழுமையாகவும் 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கின் படி வரையறை செய்துவிட்டுத் தேர்தல் நடத்த வேண்டும் எனவும் மேல்முறையீட்டில் தெரிவித்தனர் திமுக மற்றும் இதரக் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்.

நீதிமன்றத்தில் இறுதியாக 2011 மக்கள் தொகைக் கணக்கீட்டின் படிதான் நடத்துகிறோம் என ஒப்புக்குச் சொல்லிவிட்டுத் தன் பணியைத் தொடங்கிவிட்டது எடப்பாடி அரசு.

தமிழக மக்களான நாம் விழிப்புடன் இருக்க வேண்டிய நேரம் இது. 2006-இல் இருந்த கலைஞர் தலைமையிலான அரசையும், தற்போதுள்ள அடிமைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய தருணம் உங்களுக்கு வாய்த்திருக்கிறது.

நாம் செய்ய வேண்டிய காரியங்கள், ஒன்று சமூக நீதியைப் புறந்தள்ளும், ஜனநாயக வன்முறையை ஏவும் சமூக விரோதிகளைப் புறந்தள்ளுவோம்.

இரண்டு சமூக நீதிக்காகப் போராடும், இன நலன், மொழி நலனுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும், தலைவர் ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்தை ஆதரிப்போம்.

அவர் முன்னின்று நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல், உள்ளாட்சி அமைப்புகளே இல்லாமல் தங்களுடைய குறைகளையும் தேவைகளையும் பிரதிபலிக்கும் வாய்ப்பின்றி, வாய்ப்பூட்டுப் போடப்பட்டு அல்லலுக்கு ஆளாகி வரும் தமிழக மக்கள் திமுக பக்கம் நின்று பேராதரவை நல்கிடுவோம். ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## விவாத (அ)நாகரிகம்!

அண்மைக்காலங்களில் செய்தித் தொலைக்காட்சிகள் பல்வேறு நடப்புச் செய்திகள் குறித்த விவாத நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. அந்தந்தத் துறை சார்ந்த வல்லுநர்களை விவாதிக்கச் செய்து, மக்களிடையே ஒரு செய்தி குறித்த பலரின் பார்வையைக் கொண்டு செல்கின்றன.

பெரும்பாலும் ஒரு மணி நேரம் நடக்கும் இவ்வகையான விவாதங்களில் 4 முதல் 5 பேர் வரை கலந்து கொள்வதால், ஒவ்வொருவரும் அவருக்குரிய நேரத்தில் சுருக்கமாகக் கருத்துகளை முன்வைக்க வேண்டியிருக்கிறது.

எல்லோரும் எப்போதும் ஒரே கருத்துடையவர்களாக இருப்பதில்லை. இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. எனவே மாற்றுக் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய தளமாக இத்தகைய விவாதங்கள் நடைபெற வேண்டும்.

ஆனால், மாற்றுக்கருத்துகளை முன்வக்கும்போது அதை கேட்பதற்குக் கூடச் சகிப்புத்தன்மை அற்று கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்து விவாதப் போக்கினைத் திசை திருப்புவது சிலரின் தொடர் நடவடிக்கையாக இருந்து வருகின்றது. குறிப்பாக, 'வலதுசாரிச் சிந்தனையுடையவர்கள்' இவ்விதமாகத் தொடர்ந்து நடந்துகொள்வது கண்கூடு.

அதுமட்டுமின்றி, முற்றிலும் உண்மைக்கு மாறான சான்றில்லாத கருத்துகளைக் கொஞ்சமும் கூச்சமின்றிப் பொதுவெளியில் முன்வைக்கின்றனர் சிலர்.

இதன் உச்சகட்டமாக, சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு விவாதத்தில், தன்னுடன் விவாதம் செய்த திமுக ஆதரவாளர் பாலாவைத் தாக்குவது போல அச்சுறுத்தியிருக்கிறார் கராத்தே தியாகராஜன்.

குறைவான நேரத்தில், செறிவான கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவே விவாத நிகழ்ச்சிகள். லட்சக்கணக்கான மக்கள் பார்க்கும் விவாத நிகழ்ச்சிகளில், ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றமே மக்களிடம் நமது கருத்துகளைக் கொண்டு போய்ச் சேர்க்கும். வெற்றுக் கூச்சல்களும், பொய்யான தகவல்களும் மக்களிடையே உங்களது போலியான முகத்தைத் தோலுரித்துக் காட்டிவிடும்.





கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் '2020 நாள்காட்டி' வெளியிடப்பட்டுள்ளது.
விலை ரூ.50.
10 நாள்காட்டி வாங்குபவர்களுக்குக் கட்டணம் இன்றி அஞ்சலில் அனுப்பப்படும்.
தொடர்புக்கு: 9940407468 / 044 24726408

# முன்னேற்றப் பாதை வகுத்த முதல் அமைச்சரவை

● வெற்றிச்செல்வன்

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், 1920ஆம் ஆண்டு சென்னை மாகாணச் சட்டசபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று, நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை அமைக்கப்பட்டது. அமைச்சரவையின் முதலமைச்சராக சுப்பராயலு ரெட்டியாரும், இரண்டாவது அமைச்சராக இராமராய நிங்காரும் (பானகல் அரசர்) பதவியேற்றுக் கொண்டனர். அடுத்த ஆண்டில் (1921), சுப்பராயலு ரெட்டியார் உடல்நலக் குறைவினால் மறைந்த பின்னர், பானகல் அரசர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இன்று வரை, தமிழகம் சமூகநீதிப் பாதையில் அடைந்துள்ள வளர்ச்சிக்கான அடித்தளம், அந்த அமைச்சரவையில்தான் அமைக்கப்பட்டது.

1921ஆம் ஆண்டு, அனைத்துச் சமூகத்தினருக்கும் அரசுப் பணிகளில் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனினும், பார்ப்பன- ஆங்கில அதிகார வர்க்கத்தின் கைவரிசை இருந்ததால் அவ்வாணை முடக்கி வைக்கப்பட்டது. (பின்னர் நீதிக்கட்சியைச் சேர்ந்த சுப்பராயன் அமைச்சரவையில் எஸ். முத்தையா அமைச்சராக இருந்தபோது, எல்லா வகுப்பினருக்கும் மக்கள் தொகையின் அடிப்படையில் அரசுப் பணிகளைப் பங்கிட்டு அளிக்கும் ஆணை (G.O. Ms. No. 1071 / Public, dated. 04.11.1927.) வெளியிடப்பட்டது).

இன்று உலகின் முன்னேறிய நாடுகளாக அறியப்படுபவை தங்கள் நாட்டுப் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான வாக்குரிமையை அளிப்பதற்கு முன்பாகவே, 1921–ஆம் ஆண்டு நீதிக்கட்சி அரசால் சென்னை மாகாணத்தில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

பெரும்பாலான அரசுக் கல்லூரிகளின் பொறுப்பு பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலேயே இருந்தது. பார்ப்பனர் அல்லாத மாணவர்களுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்காத நிலையே இருந்து வந்தது. அரசுப் பணிகளில் மட்டும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பார்ப்பனர் அல்லாத மக்களுக்குப் பங்களித்தால் போதாது. அரசுப் பணிகளில் நுழையும் தகுதியை உருவாக்கும் கல்வித் துறையிலும் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டும். இதற்காக நீதிக்கட்சி அமைச்சரவை ஒரு திட்டத்தைத் தயாரித்தது. அனைத்து வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் கல்லூரிகளில் இடம்பெற்று, படிக்க வாய்ப்பளிக்கும் திட்டமே அது. ஒவ்வொரு கல்லூரியிலும் குழுக்களை அமைத்து அதன் மூலமே மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும். கல்லூரித் தலைவர்கள் தங்கள் விருப்பம் போல் மாணவர்களைச் சேர்க்கக் கூடாது என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்குப் பின்னர்தான் பார்ப்பனர் அல்லாத சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்லூரியில் ஓரளவு இடம் கிடைக்கும் நிலை உருவாயிற்று.

தாழ்த்தப்பட்ட மக்களைப் பஞ்சமர், பறையர் என்று அழைப்பதை விட்டு, ஆதி திராவிடர் என்றே அவர்களை அழைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது நீதிக்கட்சி அரசு.

கோயில்களில் நடைபெற்ற நிர்வாகச் சீர்கேடுகளை முடிவுக்குக் கொண்டு வர, அறநிலையத் துறைப் பாதுகாப்புச் சட்ட முன்வரைவு கொண்டுவரப்பட்டது. எனினும், இரண்டாவது அமைச்சரவையில்தான் (1923-26) அது நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறாகப் பல்வேறு சாதனைகளைச் செய்த நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை அமைக்கப்பட்ட நூறாவது ஆண்டு தொடங்கவிருப்பது இந்த நேரத்தில், நாம் பெருமையுடன் நினைவு கூர்வதற்கு உரியது.

*(முதல் அமைச்சரவை அமைக்கப்பட்ட நாள் 17.12.1920)*

---

**நீதிக்கட்சி அரசு ஆணை - பெண்களுக்கு வாக்குரிமை**

பார்ப்பனரல்லாதார் உயர்வுக்காக உழைத்த நீதிக்கட்சி பெண்களின் உரிமைகளுக்காகவும் செயல்பட்டது. இக்கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது தான் கூறிவந்தவைகளையெல்லாம் சட்டமாகவும் ஆணைகளாகவும் ஆக்கித் தன் அறிவு நாணயத்தை வரலாற்றில் பதித்துச் சென்றுள்ளது.

பெண்கள் தேர்தல்களில் வாக்களிக்கக்கூடாது என்று இருந்த தடையை அரசு ஆணை எண் 108 லா (லெஜிஸ்லேடிவ்) நாள் 10.5.1921 மூலம் நீதிக்கட்சி அரசு நீக்கியது. இந்த ஆணை காரணமாக 1921 முதல் பெண்கள் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைச் சென்னை மாகாணத்தில் பெற்றார்கள்.

**GOVERNMENT OF MADRAS**
Law (Legislative) Department
G.O. No. 108, 10th May 1921.

Elections - Legislative Council - Vote - Sex disqualifications removed.

Order - No. 108, Law (Legislative), dated 10th May 1921

The following notification will be published in the Fort St. George Gazettee:-

**NOTIFICATION**

Whereas a resolution was passed by the Legislative council recommending that the sex disqualification prescribed by sub clause (b) of Clause (1) of rule 7 of the Madras Electoral Rules for registration on the electoral roll be removed in respect of Women generally:

Now therefore, in exercise of the powers conferred by the provise to rule 7(1) of the Madras Electoral Rules, the Government of Madras is pleased to make the following regulation:-

(1) This regulation may be called "The Madras Electoral Sex Disqualification removal Regulation."

(2) No Women shall be disqualified by reason only to her sex for registration on the electoral roll of any constitutency of the Legislative Council of Madras.

(By Order of the Governor in Council)

R. Ramachandra Rao,
Secretary to Government.

To The Superintendent, Government Press for publication of notification

---

**நீதிக்கட்சி அரசு ஆணை**

பஞ்சமர் என்ற பெயர் நீக்கப்பெறல் - ஆதிதிராவிடர் என அழைக்கப் பெறல்

"பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்" என்ற வருணப் பிரிவுகளை - பிறவி காரணமாகக் கற்பிக்கப்பட்ட பிரிவுகளைத் தென்புலத்திலும் ஆரியப் பார்ப்பனர் நிலை நாட்டினர். அய்ந்தாம் சாதியார் தாழ்த்தப்பட்டவர் ஆவர். இவர்கள் "பஞ்சமர், பறையர்" என அழைக்கப்பட்டனர். இவ்வாறே அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டார்கள்.

நீதிக்கட்சி அரசு தன் ஆணை எண் 817 சட்டம் (பொது) நாள் 25.3.1922 மூலம் பஞ்சமர், பறையர் என்று தொல் திராவிடர் குடியினரை அழைக்கும், எழுதும் மரபை நிறுத்திற்று. தமிழில் "ஆதி திராவிடர்" என்றும் தெலுங்கில் "ஆதி ஆந்திரர் என்றும் அவர்களைக் குறிப்பிடவேண்டும் என்று ஆணை பிறப்பித்தது.

**GOVERNMENT OF MADRAS**
Law (Legislative) Department
G.O. No. 817, 25th March 1922.

Legislative Council Resolution - January 1922, Adoption of terms 'Adi-dravida', 'Adi Andhra' and 'Dravida' for Panchamas.

Order - No. 817, Law (General), dated 25th March 1922.

At the meeting of the Legislative Council held on the 20th January 1922, the following resolution was passed. "That this council recommended to the Government that the terms 'Panchamas' or 'Paraya' used to disignate the ancient Dravidian community in Southern India should be deleted from Government records etc., and the term 'Adi-Dravida' in the Tamil and 'Adi-Andhra' in Telugu districts be substituted instead".

2. On behalf of the Government an undertaking was given that the Government would have no objection to call the members of this Community 'Adi-dravida' in the Tamil, 'Adi-Andhra' in the Telugu districts and particular members of the Community 'Dravidas', if they prefer to be so called, but that it could not be possible to re-edit the old records. The Government accordingly direct that the following terms shall in future be adopted in place of 'Panchama' or 'Paraya' or similar terms in all official documents:

'Adi-Dravida' in the Tamil, 'Adi-Andhra' in the Telugu districts and 'Dravida' if any member of the community to be socalled.

(By Order of the Governor in Council)

R.Ramachandra Rao
Secretary to Government.

To The Departments of the Secretariat,
Copy to the Dravida Mahajana Sabha, Madras
Editor's Table.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,